# கூடுதல் மெட்ரோ ரயில் பெட்டிகள் கோயம்பேடு பணிமனை வருகை



■ ஆந்திராவில் இருந்து கன்டெய்னர் லாரிகளில் கொண்டு வரப்பட்ட, மெட்ரோ ரயில் பெட்டிகள்.

சென்னை, டிச. 6–

வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் மெட்ரோ ரயில் பாதையில் இயக்குவதற்காக, ஆந்திராவில் இருந்து, ரயில் பெட்டிகள், நேற்று கோயம்பேடு வந்தன.

சென்னை விமான நிலையம் – வண்ணாரப்பேட்டை, பரங்கிமலை – சென்ட்ரல் இடையே, மெட்ரோ ரயில் இயக்கப்பட்டு வருகிறது. இதன் நீட்டிப்பு திட்டத்தில், வண்ணாரப்பேட்டை – திருவொற்றியூர் விம்கோ நகர் வரை, மெட்ரோ ரயில் பாதை அமைக்கும் பணி நடந்து வருகிறது.

இப்பணி முடிந்து, 2020 ஜூனில், ரயில் இயக்க திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக, 200 கோடி ரூபாய் செலவில், 10 ரயில்களுக்கான மெட்ரோ ரயில் பெட்டிகள், பிரேசில் நாட்டில், ஆல்ஸ்டாம் நிறுவனத்தில் இருந்து கொள்முதல் செய்யப்பட்டுள்ளன.

ஆந்திர மாநிலம், ஸ்ரீசிட்டியில் உள்ள ஆல்ஸ்டாம் தொழிற்சாலையில், மெட்ரோ ரயில் பெட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

மூன்று ரயில்களுக்கான பெட்டிகள் தயாரிக்கும் பணி முடிந்து, ஸ்ரீசிட்டியில் இருந்து, நேற்று முன்தினம், கன்டெய்னர் லாரிகளில், பெட்டிகள் சென்னைக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இப்பெட்டிகள், நேற்று காலை, கோயம்பேடில் உள்ள மெட்ரோ ரயில் பணிமனைக்கு வந்தடைந்தது.

இத்திட்டத்தில், மீதம் உள்ள ஏழு ரயில்களுக்கான பெட்டிகள், ஸ்ரீசிட்டி தொழிற்சாலையில் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

இப்பணி முடிந்து, அனைத்து பெட்டிகளும், 2020 பிப்ரவரிக்குள், மெட்ரோ நிர்வாகத்திடம் ஒப்படைக்கப்பட உள்ளன.